# ஒதுக்கீட்டுத் தலைப்பு - 113 – துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2010 ஆம் ஆண்டு

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய கூற்றுக்கள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2012 சனவரி 25 ஆம் திகதி சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148,149,150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள் ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க நடாத்திச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் என்பது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக

சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டினை திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்திச் செல்லல் என்பன இப்பொறுப்புக்களுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்கள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களின் நிலைமை கூற்று என்பன இங்கு (அ) முதல் (இ) வரையான பொது கணக்காய்வு அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.6 வரையான பந்திகளில் உள்ளடக்கப்பட்ட ஏனைய பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களை தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

### (அ) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

### (ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (i) மொத்த ஏற்பாடும் செலவும்

துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 30,580,255,000 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 29,287,295,352 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய சேமிப்புக்கள் ரூபா 1,292,959,648 அதாவது மொத்த தேறிய நிதிஏற்பாட்டில் நூற்றுக்கு 4.23 ஆக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

## 1.5 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினரின் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (i) நிறைவேற்று நிலை | 03 | 03 | - |
| (ii) மூன்றாம் நிலை | 08 | 08 | - |
| (iii) இரண்டாம் நிலை | 29 | 28 | 01 |
| (iv) ஆரம்ப நிலை | 18 | 18 | - |
| (iv) ஏனைய(அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 01 | 01 | - |
| மொத்தம் | 59 | 58 | 01 |